இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

நீர் என்னிடம் ஒரு தெனாரியம் கூலிக்கு ஒத்துக் கொள்ளவில்லையா? உமக்குரியதைப் பெற்றுக்கொண்டு போய்விடும். உமக்குக் கொடுத்தபடியே கடைசியில் வந்த இவருக்கும் கொடுப்பது என் விருப்பம். எனக்குரியதை நான் என் விருப்பப்படி கொடுக்கக் கூடாதா? அல்லது நான் நல்லவனாய் இருப்பதால் உமக்குப் பொறாமையா?' என்றார்.இவ்வாறு கடைசியானோர் முதன்மையாவர். முதன்மையானோர் கடைசியாவர்" என்று இயேசு கூறினார். (மத் 20:13-16)

# 'கார்பன்' வெளியேற்றத்தைக் குறைப்பதில் இன்னும் தீவிர இலக்குகளை கடைபிடிக்க வேண்டும்

## -திருத்தந்தை வேண்டுகோள்

**வத்திக்கான்:** ஓசோன் மண்டலத்தைக் காக்கும் உலக நாள் கடந்த செப்டம்பர் 16 அன்று கொண்டாடப்பட்டது. அத்தினத்தை முன்னிட்டு திருத்தந்தை அவரது டுவிட்டரில் "கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதில் இன்னும் தீவிர இலக்குகளை கடைபிடிக்க, நான் அனைத்து நாடு களுக்கும் அழைப்பு விடுக்கிறேன்"என்ற சிறப்பு செய்தியை வெளியிட்டுள்ளார்.

ஆயர்கள் மாமன்றத்தின் தலைமைச் செயலராக இதுவரைப் பணியாற்றி வந்த கர்தினால் லொரென்ஸோ பால்திஸ்ஸேரி (Lorenzo Baldisseri) அவர்கள் பணிஓய்வு பெற விழைந்து அனுப்பிய விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்த மாமன்றத்தின் இணைச் செயலராகப் பணியாற்றிவந்த ஆயர் மாரியோ கிரெக் (Mario Grech) அவர்களை, ஆயர்கள் மாமன்றத்தின் தலைமைச் செயலராக செப்டம்பர் 16, அன்று நியமித்துள்ளார்.

மேலும், செப்டம்பர் மாதத் துவக்கத் திலிருந்து, அக்டோபர் 4-ஆம் தேதி முடிய சிறப்பிக்கப்படும் படைப்பின் காலத்தை யொட்டி தன் டுவிட்டர் செய்திகளை வெளியிட்டு வரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், செப்டம்பர் 16, கடந்த புதனன்று, ஓசோன் மண்டலத்தைக் காக்கும் உலக நாள் சிறப்பிக்கப்பட்டதை நினைவுறுத்த, மேலும் ஒரு டுவிட்டர் செய்தியை, இயற்கையைக் குறித்து வெளியிட்டார்.



"காலநிலையை மறுசீரமைத்து நிலைப்படுத் துவது, பூமிக்கோளத்தின் எதிர்காலத்திற்கு மிகவும் இன்றியமையாதது. எனவே, கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதில் இன்னும் தீவிர இலக்குகளை கடைபிடிக்க, நான் அனைத்து நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கிறேன்" என்ற சொற்களை, 'படைப்பின் காலம்' (#Season Of Creation) என்ற செய்தியை திருத்தந்தை வெளியிட் டிருந்தார். மேலும், படைப்பின் காலத்தை மையப்படுத்தி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் செப்டம்பர் 16, அன்று வழங்கிய மறைக்கல்வி உரையில் வெளியிட்ட ஒரு கருத்தை, தன் இரண்டாவது டுவிட்டர் செய்தியாக வெளியிட்டார்.

"பல்வேறு ஆன்மீக அறிஞர்கள் சொல்லித்தந்துள்ளது போல், வானம், பூமி, கடல், மற்றும் ஒவ்வொரு படைப்பும், படைத்தவருடன் மீண்டும் நம் உறவைப் புதுப்பிக்க உதவும் அடையாளங்களாக அமைந்துள்ளன" என்று, படைப்பின் காலம் என்ற செய்தியில் திருத்தந்தை பதிவு செய்திருந்தார்.

1987-ம் ஆண்டு, செப்டம்பர் 16ம் தேதி, கனடா நாட்டின் மோன்ட்ரியால் நகரில் கூடிய ஐ.நா. நிறுவனத்தின் பன்னாட்டுப் பிரதிநிதிகள், ஓசோன் மண்டலத்தைச் சீரழிக்கும் வாயுக்களின் வெளியேற்றம் குறித்து ஓர் ஒப்பந்தத்தை நிறைவேற்றினர். இந்த நிகழ்வை மையப்படுத்தி, 1994-ம் ஆண்டு முதல், ஐ.நா. நிறுவனம், ஒவ்வோர் ஆண்டும், செப்டம்பர் 16-ம் தேதியன்று, ஓசோன் மண்டலத்தைக் காக்கும் உலக நாளை சிறப்பித்து வருகிறது.

பூமிக்கோளத்தின் அனைத்து உயிரினங்களுக் கும் ஓசோன் மண்டலம் தேவை என்பதை வலியுறுத்த, இவ்வாண்டு சிறப்பிக்கப்பட்ட இந்த உலகநாள், "வாழ்வுக்காக ஓசோன்" என்பதை, தன் கருப்பொருளாகக் கொண்டிருந்தது.

# கார்தினாலுடனான ஒரு 'மகனின்' சந்திப்பு

மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று வரும் மதிப்புக்குரிய கார்தினால் சோட்டர் பெர்னாண்டஸ் அவர்களைச் சந்திக்க நான் 3 வாரங்களுக்கும் மேலாக காத்திருந் தேன். பின்னர் சமீபத்தில் அவரைச் சந்தித்தேன். அவரது தந்தைக்குரிய அரவணைப்பும் அன்பு கலந்த புன்னகையும் சற்றும் குறையவில்லை. அவரின் அறைக் குள் நுழையும்போது, நான் தயங்கி தயங்கி நடந்தேன், ஆனால் வெளியேறும் தருணத்தில் என் கண்கள் குளமாகின.

### ஒவ்வொரு முறையும் ஒரு மறைபோதகம்.

முந்தைய சந்திப்பில், ஒருமுறை மலேசிய திருஅவையின் நிலைமையைக் குறிப்பிடு- கையில், அவர் என்னிடம் "நாம் சீடர்களை உருவாக்குகிறோமா அல்லது பக்தர்களை உருவாக்குகிறோமா?" என்ற பெரும் வினா ஒன்றை எழுப்பினார் நான் அமைதியாக அமர்ந்தேன். மலேசியாவில் இறை ஆட்சியை நிறுவுவதற்கான மறைத் தூதுரைக்கும்-சீடர்களாகக் கத்தோலிக் கர்களை வழிநடத்துவதை விட பங்குகள் மற்றும் திருப்பணியாளர்கள் திருப்பயணங் கள், நவநாள்கள், பக்தி ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்துகிறார்கள் என்று அவர் மன வருத்தத்துடன் கூறினார்..

அடுத்து, அவரருகில் படுக்கையில் அமர்ந்திருந்த இளம் குருவானவர் அவரது கடைசி மறையுரையை எனக்கு விளக்கினார். கார்தினால் சுவரில் இருந்த சிலுவையை சுட்டிக்காட்டி, "இயேசு



கார்தினால் சோட்டர் பெர்னாண்டஸ்

எனக்காகத் துன்பத்தை அனுபவித்ததைப் போல, நானும் இப்போது அவருடன் துன்புற வேண்டும்" என்று கூறியதை எனக்கு விளக்கினார்.

அந்நேரம் நான் மெய்சிலிர்த்துப் போனேன். பேச வார்த்தைகளின்றி வாயடைத்துப் போனேன். அவருக்கு உணவளிக்க மருத்துவமனை 'சிஸ்டர்' வந்தார். அவரது புன்னகை அப்படியே இருந்தது, ஆனால் அவருக்குத் தாங்கொண்ணா வலி ஏ ப ா லு ம் , கண்களை மூடிக்கொண்டு படுக்கையின் விளிம்பை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டார்.

அவர்கள் அவரை குளியல் அறைக்கு அழைத்துச் செல்லும்போது, நான் அவரைப்பற்றிய ஆய்வில் சிறிது நேரம் கழித்தேன். அவரது மேசையில் வைக்கப் பட்டிருந்த புகைப்படங்களையும், அவர் வைத்திருந்த புத்தகங்களையும் பார்த்தேன். அவரது அலமாரியில் இருந்த சில கட்டுரைகளின் நகல்களையும் கண்டேன்.

மற்றவர்களைப் போன்று எனக்கும் இவரைக் குறித்த மருத்துவக் குறிப்புகளையோ, இவரது உடல்நிலை பற்றிய முழு விபரங்களையோ, அல்லது இவரது செயல்பாடுகள் மற்றும் திட்டங்களையோ அறிந்திட இயலாத நிலையில், அந்த சில நிமிடங்களில் அவரை மேலும் ஆழமாக அறிய விரும்பினேன்.

நான் விடைபெற அமைதியாக மீண்டும் அறைக்குச் சென்றேன். அவர் கண் விழித்துப் பார்த்தார். ஒரு பரந்த புன்னகை யோடு, அவர் என் நெற்றியில் சிலுவை அடையாளத்தை வரைந்து, கைகளை உயர்த்தி என்னை ஆசீர்வதித்தார். என்னை அறியாமல் நான் அழுதேன். இது என்னைக் கவர்ந்த தந்தையின் அன்பா, அல்லது அவரை இழக்கும் சோகமா, அல்லது அவர் என்னோடு கொண்ட உறவுக்கு நன்றியா? புரியவில்லை. அவர், அவரது கரத்தைக் குறுக்கே வைத்து, கண்ணீர் மல்கி நின்ற என்னை கட்டிப்பிடித்தார்.

சில பத்து ஆண்டுகளுக்கு முன்னர் அவர் என்னிடம், "நீ கடவுளை மகிழ்ச்சிப்படுத்த விரும்புகிறாயா? அல்லது மக்களை மகிழ்விக்க விரும்புகிறாயா? என்பதை நீ தீர்மானிக்க வேண்டும்" என்று என்னை கேட்டுக்கொண்டார். அந்த சொற்கள் பசு மரத்தாணிபோல் என் மனதில் இன்றும் நிலைத்துள்ளது.

அவர் தொடர்ந்து, (கலாத்தியர் 1:10), "நான் இன்னும் மனிதருக்கு உகந்தவனாய் இருக்கப் பார்த்தால் கிறிஸ்துவுக்குப் பணியாளனாய் இருக்க முடியாது." எனும் புனித பவுலின் வார்த்தைகளை கார்தினால் கூறியதையும் நான் நினைவுகூர்கிறேன்.

'கிறிஸ்துவுக்காக, அவருடைய திருஅவைக் காக, இந்த மலேசிய மண்ணுக்காக' என்னை அர்ப்பணிக்க அழைக்கும் அன்பாக என் ஆன்மீகத் தந்தையின் அன்பு என்னில் நிலைக்கிறது.

# இருப்பதில் நிறைவு காண்போம்

கிடைத்தவற்றை அனுபவிக்கத் தெரியாமல், கிடைக்காதவற்றைத் தேடியலைந்து அல்லலுறுகிறது, மனித மனம்.

ஒருவர் ஒரு வங்கியில் பணம் எடுத்துக்கொண்டு, பணப்பெட்டியை பின்னால் மாட்டிக் கொண்டு இரு சக்கர வாகனத்தில் வேகமாகச் செல்கிறார். வண்டியின் அதிர்வில் அந்தப் பெட்டி லேசாகத் திறந்துகொள்ளவே, 100 பத்து ரூபாய் நோட்டுகள் கொண்ட ஒரு கட்டு கீழே விழுந்து விடுகிறது. அது தெரியாமல் அந்த நபர் வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றுவிடுகிறார்.



கீழே விழுந்த வேகத்தில் 100 பத்து ரூபாய் நோட்டுகள் கொண்ட அந்த கட்டிலிருந்து ஒரே ஒரு பத்து ரூபாய் நோட்டு மட்டும் விடுபட்டு காற்றில் பறந்து சிறிது தூரத்தில் கிடந்தது. அந்த ஒற்றை பத்து ரூபாய் நோட்டு கிடந்த வழியில் ஒருவர் வந்தார். மிகவும் மகிழ்ச்சியடைந்து, அந்த நோட்டை எடுத்துக்கொண்டு உணவு விடுதிக்குப் போனார். ஒரு காப்பி குடித்துவிட்டு, அருகிலிருந்த ஆலய உண்டியலில் ஒரு ரூபாயைப் போட்டு, கடவுளுக்கு நன்றி சொன்னார். மகிழ்ச்சியாக வீடு திரும்பினார்.

மீதி 99 பத்து ரூபாய் நோட்டுகள் கொண்ட கட்டு அது விழுந்த இடத்திலேயே கிடந்தது. அந்த வழியாக ஒருவர் வந்தார். இந்த நோட்டுக்கட்டை எடுத்தார். பரபரவென்று எண்ணினார். 99 நோட்டுகள். மீண்டும், மீண்டும் பலமுறை எண்ணினார். 99 நோட்டுகள்தான்.

வங்கியில் 99 நோட்டுகள் கொண்ட கட்டுக் கொடுக்கமாட்டார்களே, அந்த ஒற்றை பத்துரூபாய் நோட்டு இங்கே பக்கத்தில்தான் கிடக்கவேண்டும் என்று தேட ஆரம்பித்தார். அந்த ஒற்றை பத்து ரூபாயைத் தேடினார், தேடினார், இன்னும் தேடிக்கொண்டேயிருக்கிறார்.

பத்து ரூபாய் கிடைத்தவர் திருப்தியாகச் சாப்பிட்டுவிட்டு சந்தோஷமாகச் சென்றார். 990 ரூபாய் கிடைத்தவரோ அதை அனுபவிக்காமல், இன்னும் ஒரு பத்து ரூபாய்க்காக அல்லாடிக்கொண்டிருக்கிறார். கிடைத்தவற்றை அனுபவிக்கத் தெரியாமல் கிடைக்காதவற்றைத் தேடியலைந்து அல்லலுறுகிறோம்

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ் : வத்திக்கான்*

**கத்தோலிக்கத் திருஅவை உலகளவில் புலம்பெயர்ந்தோர், அகதிகள் தினத்தை 27 செப்டம்பர் அன்று நினவுகூர்கிறது.**

கத்தோலிக்க மக்கள் அனைவரும் அநீதியாகத் துன்புறுத்தப்பட இவர்களுக்காகச் சிறப்பு இறைவேண்டல் செய்ய அழைக்கப்படுகிறார்கள்.

# இனவெறி என்ற பாவத்தைக் களைய ஆயர்கள் அழைப்பு

இயேசு சபை புனிதர் பீட்டர் கிளேவர் அவர்களின் திருநாளன்று, அமெரிக்க ஐக்கிய நாட்டின் பல்வேறு மறைமாவட்டங்களில் நிறைவேற்றப்பட்ட திருப்பலிகளில், ஆயர்கள், இனவெறியைப் போக்குவது குறித்து தங்கள் மறையுரையில் கூறினர்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் நிலவும் இனவெறி என்ற பாவத்தை, இறைவனின் அருள்துணையோடு மேற்கொள்ளவேண்டும் என்ற அழைப்பை, அந்நாட்டு ஆயர்கள், செப்டம்பர் 9, கடந்த புதனன்று நிறைவேற்றிய திருப்பலிகளில் விடுத்தனர்.

அமெரிக்க கண்டத்தில் அடிமைகளாக விற்கப்பட்ட கறுப்பின மக்களிடையே பணியாற்றிய இயேசு சபை புனிதர் பீட்டர் கிளேவர் (Peter Claver) அவர்களின் திருநாள், செப்டம்பர் 9-ம் தேதி சிறப்பிக்கப்பட்ட வேளையில், அமெரிக்க ஐக்கிய நாட்டின் பல்வேறு மறைமாவட்டங்களில் நிறைவேற்றப்பட்ட திருப்பலிகளில், ஆயர்கள், இனவெறியைப் போக்குவது குறித்து தங்கள் மறையுரையில் கூறினர்.

**செப்டம்பர் 9 - இறைவேண்டல் மற்றும் உண்ணாநோன்பு**

அண்மைய மாதங்களில், அமெரிக்க ஐக்கிய நாட்டில், கறுப்பினத்தைச் சேர்ந்த இருவர் காவல்துறையினரால் அடைந்த கொடுமைகளையடுத்து, எழுந்த போராட்டங்களை மனதில் கொண்டு, இனவெறியை நீக்க, மக்கள் அனைவரும் இறைவேண்டல் மற்றும் உண்ணாநோன்பினை மேற்கொள்ளுமாறு அமெரிக்க ஆயர் பேரவை அழைப்பு விடுத்தது.

‘எனக்கொரு கனவு உண்டு’ என்ற புகழ்பெற்ற உரையை, மார்ட்டின் லூத்தர் கிங் ஜூனியர் அவர்கள் வழங்கிய ஆகஸ்ட் 28ம் தேதி, அல்லது, அடிமைகளின் விடுதலைக்காக உழைத்த புனித பீட்டர் கிளேவர் அவர்களின் திருநாளான செப்டம்பர் 9-ம் தேதி, ஆகிய நாள்களில், இந்த இறைவேண்டலையும், உண்ணாநோன்பையும் மேற்கொள்ள, ஆயர்கள் அழைப்பு விடுத்திருந்தனர்.

**அயலவரில் கிறிஸ்துவைக் காண்பதற்கு…**

மற்றவர்களிடம் கடின இதயம் கொண்டிருப்பதால் உருவாகும் வெறுப்பு, புறக்கணிப்பு என்ற பாவங்களைக் குறித்து, தன் மறையுரையில் குறிப்பிட்ட வாஷிங்டன் பேராயர் வில்டன் கிரகரி அவர்கள், நம் அயலவரில் கிறிஸ்துவைக் காண்பதற்கு, புனித பீட்டர் கிளேவர் அவர்களின் பரிந்துரையை நாடுவோம் என்று தன் மறையுரையில் குறிப்பிட்டார்.

இறைவனால் உருவாக்கப்பட்ட யாரையும், நாம், மனித நிலையிலிருந்து குறைத்து மதிப்பிட்டால், அது, நம் மனித இயல்பையே அவமதிப்பதாகும் என்பதை, புனித பீட்டர் கிளேவர் நமக்குச் சொல்லித் தருகிறார் என்று Tyler மறைமாவட்ட ஆயர் Joseph Strickland அவர்கள், தன் மறையுரையில் கூறினார்.

**புனித பீட்டர் கிளேவர்**

1580-ம் ஆண்டு, இஸ்பெயின் நாட்டில் பிறந்த பீட்டர் கிளேவர் அவர்கள், தன் 20-வது வயதில், இயேசு சபையில் சேர்ந்து,



புனித பீட்டர் கிளேவர்

இயேசு சபை புனிதரான அல்போன்ஸ் ரொட்ரிகுவெஸ் அவர்களின் சொற்களால் தூண்டப்பட்டு, மறைபரப்புப்பணிக்கென தன்னையே அர்ப்பணித்தார்.

தென் அமெரிக்க கண்டத்தில் அடிமை வர்த்தகம் பரவியிருந்த வேளையில், புனித பீட்டர் கிளேவர், அடிமைகளாக விற்பனை செய்யப்பட்ட கறுப்பின மக்களிடையே 40 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி, 1654ம் ஆண்டு, தன் 74 வயதில் இறையடி சேர்ந்தார்.

# கடவுளின் நீதி நம்மிலும் நிலவட்டும்

பொதுக்காலத்தின் இருபத்து ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமையான இன்று நாம் படிக்கக்கேட்ட வாசகங்கள் அனைத்தும் 'கடவுளின் வழிமுறைகள், எண்ணங்கள் எல்லாம் மனிதரின் வழிமுறைகள், எண்ணங்கள் அனைத்தையும் விட உயர்வானவை என்ற சிந்தனையை வழங்குகின்றன.

இன்றைய .நற்செய்தியில் நிலக்கழார் ஒருவரின் உவமையை வைத்து ஆண்டவர் நம்மோடு பேசுகிறார் . நிலக்கிழார் ஒருவர் தம் தோட்டத்தில் வேலையாள்களை வேலைக்கு அமர்த்த விடியில் காலையில் வெளியில் செல்கிறார் . இந்த நிலக் கிழாரும் , ஆண்டவரின் தோட்டமான திராட்சை தோட்டத்தில் வேலை செய்ய ஒவ்வொருவரையும் அழைக்கிறார்

அழைக்கும் போது ஒருவருக்கு ஒரு தெனாரியம் என சொல்லி அனுப்புகிறார் அப்போது வேலை செய்தவர்களுக்கு பணம் கொடுக்க ஒவ்வொவரையும் அழைத்து, கடைசி ஆளை அழைத்து ஒரு தெனாரியம் கொடுக்க, முதலில் வந்தவர் நமக்கு அதிகம் கிடைக்கும் என எதிர்பார்த்த வேளையில் அவர்களுக்கும் ஒரு தெனாரியமே, கொடுத்தார்.

அதை அவர்கள் வாங்கும் போது தங்களுடைய ஆதங்கத்தை வெளிபடுத்துகிறார்கள், பகல் முழுவதும் வேலைப் பளுவையும், கடும் வெயிலையும் தாங்கிய எங்களோடு இவர்களையும் இணையாக்கி விட்டீரே என்று புலம்புகிறார்கள் . அவர்கள் புலம்புவதில் காரணம் இருக்கத்தான் செய்கிறது ஆனால், நிலக்கிழார் வாக்களித்தப்படி தன் கடமையை செய்து விட்டார்.

திருஅவை என்ற ஆலமரம் வளரவேண்டுமானால், நிலக்கிழார் செய்தது சரியே .நாம் ஆதிக் கிறிஸ்தவரோ, பாதிக் கிறிஸ்தவரோ, அல்லது இடையில் வந்தவரோ ஆலயத்தில் நுழைந்தவுடன், ஆண்டவர் பார்வையில் நாம் அனைவரும் ஒரு தெனாரியமே . அங்கு உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்றோ, பணக்காரர் ஏழைகள் என்றோ பாகுகாடு இல்லை . மத்தேயு 5:45ல் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார், நேற்மையுள்ளோர் மேலும் , நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செகிறார்' என அறிகிறோம். ஆண்டவர் தம் மக்களைப் பிரித்துப் பார்ப்பது கிடையாது . அவருக்கு எல்லாரும் ஒன்றே ஒருசிலர் திராட்சைத் தோட்ட உரிமையாளர் கடைசியில் வந்த கூலியாட்களுக்கும் ஒரு தெனாரியம் கொடுக்கக் காரணம், அந்த கூலியாட்களை நம்பி அவர்களுடைய குடும்பம் இருக்கிறது. எனவே ஒரு தெனாரியத்திற்கும் குறைவாக ஊதியம் கொடுத்தால் அவர்களுடைய குடும்பம் பட்டினியில் வாடக்கூடும் என்பதற்காகத் தான் திராட்சைத் தோட்ட உரிமையாளர் இப்படிச் செய்தார்" எனக் கூறுவார்கள். இங்கே இறைவனின் இரக்கம் வெளிப்படுகிறது. .

ஆகவே, முதல் வாசகம் கூறுவதுப் போல் ஆண்டவரை காண்பதற்கு வாய்ப்புள்ள போதே அவரைத் தேடுங்கள்; அவர் அண்மையில் இருக்கும் போதே அவரை நோக்கி மன்றாடுங்கள் என்று வளியுறுத்துகிறார் இறைவாக்கினர் எசாயா .

இன்றைய இரண்டாவது வாசகத்தில் புனித பவுல் எந்த நேரத்திலும் உலகை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும் என்கிறார் . கடவுளின் தயவு எளியவருக்குக் கிடைத்து விட்டால் வலியவர்கள் அதைக்கண்டு பொறாமை கொள்கிறார்கள். உவமையிலும் கூட திராட்சைத் தோட்ட உரிமையாளர் கடையில் வந்த கூலியாள்களுக்கு ஒரு தெனாரியம் கொடுத்ததை முதலில் வந்தவர்கள் பொறாமைக் கண்கொண்டு பார்க்கிறார்கள். அதனால்தான் அவர், "நான் நல்லவனாய் இருப்பதால் உமக்குப் பொறாமையா?" என்கிறார். ஆகவே வாழ்க்கையில் எத்தகையத் தருணத்திலும் ஒரு மனிதரின் வளர்ச்சியைக் கண்டு மகிழவேண்டுமேயொழிய பொறாமைப்படக் கூடாது. பின்னர் பொறாமையே அம்மனிதரின் அழிவுவுக்குக் காரணமாகிவிடும்.

ஆகவே, பிறர் வளர்ச்சியடையும்போது பொறாமைப்படாமல், மகிழ்ச்சியுறுவோம். ஆண்டவர் எப்படி எளியவர்மீது அதிகமாக அன்பும், இரக்கமும், அக்கறையும் கொண்டு வாழ்கிறாரோ அதைப் போன்று நாமும் எளியவர், வறியவர்மீது அன்பும் இரக்கமும் கொண்டு வாழ்வோம். அதன்வழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம்

**பொதுக்காலம் 25-ஆம் ஞாயிறு**

எசே 55: 6-9
திபா 145: 2-3. 8-9. 17-18 .
பிலி 20c-24, 27a
மத் 20: 1-16a

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் 4**